**Tamilmanam International Research Journal of Tamil Studies**
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026

**Vol. 12 No. 04 (2026): September 2026**, **p466-474** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed* ✓

# சங்க இலக்கியத்தில் மல்லர் கம்பம் விளையாட்டு

*Mallakhamb Sport in Sangam Literature*

**முனைவர். த. நடராஜன்,**

உதவி உடற்கல்வி இயக்குநர், மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,

தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், தூத்துக்குடி – 628 008.

**Dr. D. Natarajan*,**

*Assistant Director of Physical Education, Fisheries College and Research Institute,*
*Tamil Nadu Dr. J. Jayalalithaa Fisheries University, Thoothukudi – 628 008.*

**முனைவர். க. அம்பேத்கார்,**

உதவிப் பேராசிரியர், சேரன் உடற்கல்வி கல்லூரி, புன்னம்சத்திரம், கரூர் - **639 136**

**Dr. K. Ambethkar,**

*Assistant Professor, Cheran College of Physical Education, Punnamsatram, Karur - 639 136.*

***Article history***
Received: 20-08-2026
Revised: 01-09-2026
Accepted: **08-09-2026**
Published on: **10-09-2026**

*Corresponding Author
Email:
*natarajan@tnfu.ac.in*

**Abstract:**
Each of the traditional martial sports of Tamil society possesses its own unique individuality. The heritage sports of the Tamils were not created merely for entertainment; they were designed to simultaneously provide joy to the mind and strength to the body. These traditional sports also speak to the pride of our land. It is through Sangam literature that we are able to understand the nature of the traditional sports of that era today. The roots of all martial arts practiced around the world today can be traced back to the heritage sports of the Tamils, such as Malladal (wrestling, Mallakhamb), Silambam, combat wrestling (Marpor), Adimurai, and Kalaripayattu. The primary objective of this research study is to highlight these traditional sports, which are currently facing extinction, so that today's society living in the modern world may come to know and understand them.

**Keywords:** *Sangam literature, Malladal, Mallakhamb, Heritage sports.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**Article DOI:** https://doi.org/10.63300/tm12042026.36

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் சமூகத்தின் வீர விளையாட்டுகள் ஒவ்வொன்றும் தனித்துவம் மிக்கவையாகும். தமிழரின் மரபு விளையாட்டுகள் அனைத்தும் வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டும் உருவாக்கப்பட்டவை அல்ல; அவை மனதிற்கு மகிழ்ச்சியையும், உடலுக்கு வலிமையையும் ஒருங்கே அளிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டவை. இந்த வீர விளையாட்டுகள் நம் மண்ணின் பெருமையைப் பேசுவனவாகவும் உள்ளன. சங்க இலக்கியங்கள் வழியாகவே இன்று நாம் அக்கால மரபு விளையாட்டுகளின் தன்மையை அறிந்து கொள்ள முடிகிறது. இன்று உலகெங்கும் பயிலப்படும் தற்காப்புக் கலைகள் அனைத்தினதும் வேர், தமிழரின் மரபு விளையாட்டுகளான மல்லாடல் (மல்யுத்தம், மல்லர் கம்பம்), சிலம்பம், மற்போர், அடிமுறை, களரி போன்றவற்றிலேயே காணப்படுகின்றது. நாகரிக உலகில் வாழும் இன்றைய சமுதாயம், அழிந்து வரும் இந்த மரபு விளையாட்டுகளை அறிந்து கொள்ளும் வகையில் அவற்றை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

**கலைச் சொற்கள்:** சங்க இலக்கியங்கள், மல்லாடல், மல்லர் கம்பம், மரபு விளையாட்டுகள்.

## 1. முன்னுரை

தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம் மற்றும் பழக்கவழக்கங்கள் இவ்வுலகிற்கே சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. தமிழர்களின் விளையாட்டுகள் உடலையும் மனதையும் ஒருங்கிணைத்து விளையாடும் வகையில் உருவாக்கப்பட்டவை. மகிழ்ச்சிக்கும் உடல் வலிமைக்கும் மனிதர்கள் தமிழர்களின் இந்தப் பாரம்பரிய விளையாட்டுகளையே பல நூற்றாண்டுகளாக விளையாடி வந்துள்ளனர். எனினும், இவற்றில் பல விளையாட்டுகள் காலப்போக்கில் அழியத் தொடங்கிவிட்டன. இவ்வாறு அழிந்து வரும் மரபு விளையாட்டுகளில் ஒன்றுதான் மல்லர் கம்பம் விளையாட்டு.

‘மல்லர்’ என்றால் மற்போர் புரியும் வீரர் என்றும், ‘கம்பம்’ என்றால் மரம் என்றும் பொருள்படும். இவ்வாறு மல்லர் கம்பம் என்பது, மரக் கம்பத்தின் மீது மற்போர் வீரர்கள் மேற்கொள்ளும் பயிற்சி விளையாட்டைக் குறிக்கிறது. இந்த மல்லர் கம்ப விளையாட்டு பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. மழைக் காலங்களிலும், போர் இல்லாத காலங்களிலும், தங்களுக்கு எதிரான சம வீரர்கள் இல்லாத காலத்திலும், அரசர்களும் போர் வீரர்களும் தங்களின் தேகத்தை வலிமையாக வைத்துக் கொள்வதற்காக மல்லர் கம்பப் பயிற்சியினை மேற்கொண்டனர்.


| Copyright © Author(s)

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.36**

மல்லர் கம்பப் பயிற்சி முதலில் கல் தூண்களிலேயே தொடங்கப்பட்டது. கல் தூண்களில் பசு மற்றும் ஆடுகளிலிருந்து பெறப்பட்ட கொழுப்புகளைத் தடவி, பலவிதமான புடிகள், ஏறுதல், இறங்குதல், தாவுதல், குதித்தல் மற்றும் பல ஆசனங்கள் செய்து மல்லர்கள் தங்களது பயிற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் காலப்போக்கில் கல் தூண்கள் மல்லர்களின் வலிமையைத் தாங்காமல் உடையத் தொடங்கின. மேலும், கடினமான கல் தூணில் பயிற்சி மேற்கொள்வதால் மல்லர்கள் பலவிதமான உடல் காயங்களுக்கும் உள்ளாகினர். இந்தச் சிக்கல்களைத் தீர்க்கும் வகையில், மரத்தை நட்டு, அதன் மீது தாவர கொழுப்புகளைத் தடவி, மல்லர்கள் தங்களது பயிற்சியை மேற்கொள்ளும் மரபு உருவானது; இதுவே மல்லர் கம்பப் பயிற்சியின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தது.




| Copyright © Author(s)




**படம் 1: மல்லர் கம்பப் பயிற்சி முறையின் தோற்றக் குறிப்பு — கல் தூணில் தொடங்கி மரக் கம்பமாக வளர்ச்சி பெற்ற பயிற்சி முறையைக் காட்டும் திட்டவிளக்கப் படம்.**

## 2. சங்க இலக்கியச் சான்றுகள்

மல்லர் கம்ப விளையாட்டு, மல்லாடல் பயிற்சி பெறுவதற்கான முதன்மைப் பயிற்சியாகக் கருதப்பட்டது. சங்க இலக்கியங்களில் ‘மல்’ என்னும் சொல்லுக்கு ‘வலிமை’ என்பது பொருளாகும். மல்லாடல் விளையாட்டு பற்றிய குறிப்புகள் பல சங்க இலக்கிய நூல்களில் இடம்பெற்றுள்ளன.

### 2.1 கலித்தொகை

கலித்தொகை நூலின் 52 மற்றும் 134 ஆவது பாடல்களில் மல்லர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

***“மல்லரை மறம் சாய்த்த மால் போல்”***

***“மல்லரை மறம் சாய்த்த மலர் தண் தார் அகலத்தோன்”***

இப்பாடல் வரிகள் மல்லரைப் பற்றிக் குறிப்பிடுவதோடு, மல்லாடல் வீரத்தின் மேன்மையையும் எடுத்துக் காட்டுகின்றன (கேசிகன், கலித்தொகை).

### 2.2 புறநானூறு

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.36**

சோழன் தித்தன் மகன் கோப்பெருநற்கிள்ளி, மல்லாடும் விளையாட்டில் சிறந்தவராகக் கருதப்பட்டவர். இவர் ஆம்பூர் சென்று, அங்கு திமிருடன் இருந்த ஆமூர் மல்லன் என்பவனை மற்போரில் வென்றார் என்பதனை புறநானூற்றுப் பாடல் (80) விளக்குகிறது:

***"இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண் / மைந்துடைமல்லன் மதவலி முருக்கி"***

மேலும், 'கவிகை' எனும் பகுதியில் "மல்லன் கைப்பட்டோரே" என்ற பாடல் வரிகள் மல்லரை வீரன் என்று குறிப்பிடுகின்றன (கேசிகன், புறநானூறு).

### 2.3 அகநானூறு

அகநானூற்றுப் பாடல் (386) மல்லர் கம்ப விளையாட்டு சங்க காலத்தில் திருவிழா போன்று ஊரின் பொதுவான இடத்தில் நடைபெற்றதை உணர்த்துகிறது:

***"மல் அடு மார்பின் வலி உற வருந்தி"***

இப்பாடல் மல்லர் கம்பப் பயிற்சி பொது இடத்தில், பலரும் காணும் வண்ணம் நடைபெற்றது என்பதை உறுதி செய்கிறது (கேசிகன், அகநானூறு).

### 2.4 பட்டினப்பாலை

பட்டினப்பாலை பாடல் வரிகள் (68–74) மற்போர் செய்யும் வீரர்கள் பயிற்சி எடுப்பதற்கென்று தனியான இடத்தினைத் தேர்வு செய்து, அங்கு தினமும் பயிற்சியில் ஈடுபட்டனர் என்ற தகவலைத் தருகின்றன:

***"மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇ / கையினும் கலத்தினும் மெய்யுறத் தீண்டி"***

இப்பாடல் வரிகள் மற்போர் பயிற்சியின் ஒழுங்குமுறையையும், தினசரிப் பயிற்சி மரபையும் எடுத்துக்காட்டுகின்றன (கேசிகன், பட்டினப்பாலை).


### 2.5 பதிற்றுப்பத்து

பதிற்றுப்பத்து நூல், "வாள் நுதல் கணவ! மல்லர் ஏறே" என்ற பாடல் வரி மூலம் மல்லரைப் போர் மறவர் என்று குறிப்பிடுகிறது. மேலும், அதே நூலில்:

***"செருமிகு தானை வெல் போரோயே / ஆடு பெற்று அழிந்த மல்லர் மாற"***

என்ற பாடல் வரிகள் மன்னரின் வீரம், வெற்றி, நற்குணங்கள் ஆகியவற்றை மல்லர் என்னும் உருவகத்தின் மூலம் சிறப்பித்துக் கூறுகின்றன. பரிபாடல் மற்றும் பதிற்றுப்பத்து ஆகிய இரு நூல்களிலும் 'மல்லன்' என்ற சொல் பல இடங்களில் இடம்பெற்றுள்ளது. "கொண்டி மல்லர் கொல் களிறு பெருக!" என்ற பாடல் வரி, கொண்டிப் போரில் பெற்ற வெற்றியையும், அதன் விளைவாகக் கிடைத்த செல்வம் மற்றும் போர் யானைகளையும் சிறப்பித்துக் கூறுகின்றது.

**2.6 சிலப்பதிகாரம்**




இளங்கோவடிகள் தமது சிலப்பதிகார நூலில், "ஞாலத்து வாழ்வோர் என்றும் மல்லன் மா ஞாலம் இருளுட்டிமாமலை" மேல் என்று 'மல்லன்மா' எனும் சொல்லாட்சியைக் குறிப்பிடுகின்றார். இது மல் என்னும் கருத்தாக்கம் இலக்கிய உருவகமாகவும் பரவலாகப் பயின்று வந்துள்ளதைக் காட்டுகிறது (கேசிகன், சிலப்பதிகாரம்).

**2.7 சீவக சிந்தாமணி**

மல்லர்களின் வீரத்தினையும், வெற்றி மற்றும் சிறந்த பண்புகளையும் சீவக சிந்தாமணி நூலின் 372ஆம் செய்யுள் விரிவாக எடுத்துக் கூறுகின்றது. அகவல் பாக்களில் பாடல் எண் 37ஆக அமைந்த


“மல்லன் என்னும் வெல்போர் விடலையும்” என்ற வரி மற்போர் செய்யும் வீரர்களைப் பற்றிய பல தகவல்களைத் தருகிறது.

### 2.8 புறப்பொருள் வெண்பா மாலை

புறப்பொருள் வெண்பா மாலை நூலில்:

***“கண்டான், மலைந்தான் கதிர்வானம் காட்டியே / கொண்டான் பதாகை மற மல்லன் — வண்டாக்கும்”***

என்ற வரிகள் மற்போர் வீரனின் திறமையையும் வெற்றியையும் விளக்குகின்றன. இவ்வாறாக, சங்க இலக்கியங்கள் வழியாகவே தமிழர்களின் மரபு விளையாட்டான மல்லர் கம்பம் விளையாட்டைப் பற்றி விரிவாக அறிந்துகொள்ள முடிகிறது.




**படம் 2: மல்லர் / மல்லர் கம்பம் பற்றிய குறிப்புகளைத் தரும் சங்க கால இலக்கிய நூல்களின் தொகுப்புப் பட்டியல்.**

### 3. கல்வெட்டு மற்றும் சிற்பச் சான்றுகள்

**Article DOI:** https://doi.org/10.63300/tm12042026.36

சங்க இலக்கியச் சான்றுகளுக்கு அப்பாற்பட்டு, மல்லர் கம்பம் விளையாட்டுக்கான உறுதியான ஆதாரங்கள் தமிழகத்தில் உள்ள கோயில் சிற்பங்களிலும் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைந்துள்ள கங்கைகொண்ட சோழீசுவரர் கோயிலிலும், காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாத கோயிலிலும், கல் தூண்களில் வெட்டப்பட்டுள்ள சிற்பங்கள் இந்த மரபு விளையாட்டுக்கான காலம் கடந்த சான்றுகளாக விளங்குகின்றன. இக்கோயில் சிற்பங்கள், மல்லாடல் மற்றும் மல்லர் கம்பப் பயிற்சி முறை தமிழக வரலாற்றில் எவ்வளவு ஆழமாக வேரூன்றியிருந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

**4. முடிவுரை**

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் விளையாட்டுகள், ஆட்சி முறை, போர்க்களம் மற்றும் பேராண்மை போன்ற அனைத்துத் துறைகளிலும் தமிழர்கள் சிறந்து விளங்கியதைத் தெளிவாகக் கூறுகின்றன. புறநானூறு, அகநானூறு, கலித்தொகை, பரிபாடல், சிலப்பதிகாரம், பெருந்தொகை மற்றும் புறப்பொருள் வெண்பா மாலை போன்ற பெருங்கதை நூல்களில் மல்லாடல் விளையாட்டின் சிறப்பினைத் தெளிவாகக் காணமுடிகிறது. மேலும், மல்லர் கம்பம் விளையாட்டுக்கான சான்றுகள் தமிழ்நாட்டில் உள்ள கங்கைகொண்ட சோழபுரத்துக் கங்கைகொண்ட சோழீசுவரர் கோயில் மற்றும் காஞ்சிபுரத்துக் கைலாசநாத கோயில் ஆகியவற்றின் கல் தூண்களில் உள்ள சிற்பங்களில் காணப்படுகின்றன.

தமிழர்களின் மரபுக் கலைகளுள் ஒன்றான மல்லர் கம்பம் விளையாட்டினைப் போற்றுவோம்; நாட்டின் அனைத்து மக்களுக்கும் நம் மரபு விளையாட்டின் பெருமையைக் கொண்டு சேர்ப்போம்.

**Works Cited**

[1.] Kesigan, Puliyur, editor. Aganaanooru: Moolamum Uraiyum. Saratha Pathipagam, 2010.

[2.] Kesigan, Puliyur, editor. Kalithogai: Moolamum Uraiyum. Saratha Pathipagam, 2010.

[3.] Kesigan, Puliyur, editor. Pattinappalai: Moolamum Uraiyum. Saratha Pathipagam, 2010.

[4.] Kesigan, Puliyur, editor. Purananuru: Moolamum Uraiyum. Saratha Pathipagam, 2010.

[5.] Kesigan, Puliyur, editor. Silappathikaram: Moolamum Uraiyum. Pari Nilayam, n.d.

[6.] Veeraragavan, and Raman. "Tamil Sports in Sangam Literature." International Journal of

Tamil Language and Literary Studies, vol. 5, no. 1, 2022.

**குறிப்புகள் (தமிழ்)**

[1] புலியூர்க் கேசிகன். அகநானூறு மூலமும் உரையும். சாரதா பதிப்பகம், சென்னை–14, 2010.

[2] புலியூர்க் கேசிகன். சிலப்பதிகாரம் மூலமும் உரையும். பாரி நிலையம், சென்னை–01.

[3] புலியூர்க் கேசிகன். பட்டினப்பாலை மூலமும் உரையும். சாரதா பதிப்பகம், சென்னை–14, 2010.

[4] புலியூர்க் கேசிகன். புறநானூறு மூலமும் உரையும். சாரதா பதிப்பகம், சென்னை–14, 2010.

[5] புலியூர்க் கேசிகன். கலித்தொகை மூலமும் உரையும். சாரதா பதிப்பகம், சென்னை–14, 2010.

[6] வீரராகவன் மற்றும் இராமன். “சங்க இலக்கியத்தில் தமிழர் விளையாட்டுக்கள்.” தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 1, 2022.

**நிதி சார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement**

இல்லை / NIL.

**கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement**

இல்லை / NIL.

**கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration**

இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

| Copyright © Author(s)